**அரச அச்சக கூட்டுத்தாபனம் - 2018**

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் (“கூட்டுத்தாபனம்”) 2018 இன் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத்தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படவேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து 2018 திசெம்பர் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழியில்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனம் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும். இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனம் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கூட்டுத்தாபனம் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,
- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்
- கூட்டுத்தாபனம் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதி அறிக்கைகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காதது

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம்-01 நியமத்தின் 79(ஆ) பந்தியின் அடிப்படையில் மூலதனத்தில் சோக்கப்பட்டுள்ள இருப்புகளின் தன்மை அதை பராமரிக்கும் தன்மை போன்றவற்றை வெளிப்படுத்த வேண்டியது அவசியம். ஆனால் நிறுவனம் ரூபா 102,491 மூலதன பங்குடன் ரூபா 1000,000 பொது ஒதுக்கம் ரூபா 13,901,142 மறுமதிப்பிட்டு இருப்புகள் தொடர்பாக ரூபா 808,011,707 பற்றி எதுவும் வெளியிடவில்லை. | கூட்டுத்தாபனத்தின் ஆரம்பத்தில் இந்த ஒதுக்கங்கள் காணப்பட்டன. இறுதி கணக்குகளில் போதுமான அளவு பதிவு செய்யப்பாட்டுள்ளது. | ஒதுக்கத்தின் தன்மை நோக்கங்கள் போன்றவை குறித்து வெளிப்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம்-07<br>• மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான ஆரம்ப காசு மற்றும் காசிற்கு சமமான தொகை ரூபா 15,643,749 ஆகும். இது காசு பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது காசு மற்றும் காசிற்கு சமமான சரியான தொகை ரூபா 15,801,749 காணப்பட்டது. மேலும் ரூபா 158,000 வேறுபாடு காணப்பட்டது. | ஊழியர் பயிற்சிக்கு ரூபா 158,000 கூட்டுத்தாபனத்தினால் செலவளிக்கபட்டது. எனவே அது ஊழியர்களிடம் தாமததாக பெறப்பட்டது. | காசு பாய்ச்சல் கூற்று நியமத்தில் குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளபடி தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| • மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நடைமுறை பொறுப்பு அதிகரிப்பு ரூபா 8,078,063 இருந்தது. இது காசுபாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ரூபா 40,133 அதிகரிப்பை காட்டிலும் குறைவாக இனம் கானப்பட்டது. | | |
| (இ) இலங்கை கணக்கீட்டு நியமம்- 23 மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் வாங்கப்பட்ட லாட்டரி அச்சுப்பொறிக்கான கடனுக்கான வட்டி இணங்கானப்பட்டு நியமத்தின் 09 பந்தி யின் படி மூலதனமாக்கப்பட வேண்டும். | 2018 முதல் காலண்டு வரை செய்யப்பட்டுள்ள வட்டி செலவுகள் மூலதனமாக்கப்படடுள்ளன. | கூட்டுத்தாபனம் தயாரித்த கணக்காய்வு செய்யத ஆவணங்களின்படி அதில் வட்டி செலவுகள் காணப்படவில்லை. எனவே தேவையான கணக்கீட்டு பதிவுகள் நியமத்தின்படி செய்ய வேண்டும். |

**1.5.2 கணக்கியல் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானம் | முகாமைத்துவ கருத்துகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் திசெம்பர் 31 இல் காசு மற்றும் வங்கி மீதியானது ரூபா 32,987,997 மற்ற வங்கி மேலதிகப் பற்று கணக்கு எதிராக ரூபா 5,434,426 ஈடு செய்யப்பட்டிருந்தது. இதனால் நிதி நிலவரக் கூற்றில் காசு மற்றும் காசுக்கு சமமான தொகை (தேறிய மீதி) ரூபா 27,553,571 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. மேலும் காசு மற்றும் காசுக்கு சமமான தொகை ரூபா 5,434,426 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எந்த பதிலும் வழங்கப்படவில்லை | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இந்த கணக்கீட்டு பிழை திருத்தப்பட்டிருக்க வேண்டும். |
| (ஆ) கடந்த ஆண்டின் இறுதி மூலப்பொருள் இருப்பு ரூபா 91,924,671 பிழையாக ரூபா 93,911,088 குறித்து காட்டப்பட்டிருந்தது. அதனால் தேறிய நட்டம் ரூபா 1,986,418 ரூபாவால் கூட்டி காட்டப்பட்டிருந்தது. | எந்த பதிலும் வழங்கப்படவில்லை | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இந்த கணக்கீட்டு பிழை திருத்தப்பட்டிருக்க வேண்டும். |
| (இ) கடந்த ஆண்டின் இறுதி உதிரிபாகங்களின் | எந்த பதிலும் வழங்கப்படவில்லை | அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் |

| | | |
|---|---|---|
| இருப்பு ரூபா 34,351,421 இருந்தது. இது தவறுதலாக ரூபா 32,856,421 ஆக குறித்து காட்டப்பட்டிருந்தது. அதனால் தேறிய நட்டம் ரூபா 1,495,000 ரூபாவால் கூட்டி காட்டப்பட்டிருந்தது. | | போது இந்த கணக்கீட்டு பிழை திருத்தப்பட்டிருக்க வேண்டும். |

**1.5.3 பெறவேண்டியவை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துகள் | பரிந்தரை |
|---|---|---|
| (அ) 06 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேற்பட்ட வியபார கடன்படுனரின் நிலுவைத் தொகை ரூபா 110,854,132 ஆகும். வியபார கடன்படுனரின் நிலுவைத் தொகையை அறவிட கூட்டுத்தாபனம் தவறவிட்டது. மீளாய்வு ஆண்டில் டிசம்பர் 31 இல் ரூபா 326,777,812 இருந்தது. இது மொத்த நிலுவைத் தொகையில் 34 சதவீதம் அகும். | சட்டப்பிரிவு, நிதிப் பிரிவு மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு ஆகியவை இணைந்து நிலுவை கடனை அறவிடுகின்றன. | கடன் நிலுவைகளை உடனடியாக வசூலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் |
| (ஆ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதியில் தேசிய காகித கம்பனியிடமிருந்து ரூபா 9,753,427 பெறப்பட வேண்டியிருந்ததுடன் அதே கம்பனிக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 7,460,675 மீதி தீர்ப்பனவு செய்யப்படாதிருந்தது. இவ் மீதியில் 5 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள ரூபா 7,989,976 தொகையான மொத்த பெறவேண்டியவை மற்றும் ரூபா 5,578,142 தொகையான செலுத்த வேண்டியவை என்பன உள்ளடங்கியுள்ளன. இம் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. தேசிய காகித கம்பனியின் தொழிற்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளதால் இந்த | கூட்டுத்தாபனத்திடம் இருந்து பெறப்பட வேண்டிய பணத்தை பெற தேசிய காகித கம்பனியின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்து வருகிறது. | இந்த நிலுவைகளை விரைவாக தீர்க்க வேண்டும் |

| | | |
|---|---|---|
| தீர்ப்பனவுகள் நிச்சயமற்றதாக காணப்படுகிறது. | | |
| (இ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதி நிலவரப்படி மக்கள் தொகை மற்றும் புள்ளிவிவர திணைக்களத்திடம் கூட்டுத்தாபனம் ரூபா 11,836,110 பெறத்தக்கவை எனக் கூறப்பட்டாலும் அது உறுதிப்படுத்தப்படவில்லை இந்த மீதி தொடர்பாக நிச்சயமற்ற தன்மை கானப்படுகிறது. | எதிர்காலத்தில் திருத்தப்படும். | கூட்டுத்தாபனம் கணக்குகளில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால் திணைக்களத்தின் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளையும் மீதமுள்ள பற்றுச்சிட்டுக்களை பரிசீலிப்பதன் மூலம் தேவையான மாற்றங்களை செய்ய வேண்டும் |

**1.6 சட்டங்கள் விதிகள் ஒழுங்குமுறைகள் மற்றும் முகாமைத்துவ முடிவுகளுக்கு இணங்காதது.**

| சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை குறிப்பிடுவது | இணக்கமின்மை | முகாமைத்துவம் குறித்த கருத்து | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) மே 25, 2015 திகதியிட்ட பொது நிறுவனத்துறை சுற்றறிக்கை எண் PED 1/2015 இன் பிரிவு 4.2 | சுற்றிக்கை அறிவித்தலின்படி குழு போக்குவரத்துக்கு நடு மட்ட முகாமைத்துவத்துக்கு உரிமை உண்டு. எவ்வாறயினும் சுற்றிக்கை அறிவித்தலை பின்பற்றமால் 15 நடு மட்ட முகாமையாளாருக்கு போக்குவரத்து கட்டணமாக (ஒருவருக்கு) ரூபா 17,500 படி மாதந்தம் செலுத்தப்பட்டது. இதனால் ஆண்டு மதிப்பாயின் போது கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 3,132,500 செலுத்த வேண்டி ஏற்பட்டது. | திரவத்தன்மை மேம்பட்டால் சுற்றறிக்கை ஏற்ப போக்குவரத்து வசதிகளை வழங்க போதுமான எண்ணிக்கையிலான வாகனங்கள் பயன்படுத்தப்படும். | தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்ப செயல்பட வேண்டும் |
| (ஆ) 1942 ஆம் ஆண்டின் 45 இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு | தீ விபத்து சமிக்கை முறைமை நிறுவப்படவில்லை. | தீ விபத்து சமிக்கை முறைமை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். | பொருந்தக்கூடிய சட்டத்திற்கு இணங்க வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 இல் முடிவில் கூட்டுத்தாபனத்தின் நிதி பெறுபேறு பற்றாக்குறை ரூபா 406,985,154 கணக்குகளில் பதியப்பட்டிருந்தது. இந்த பற்றாக்குறை முன்னைய ஆண்டில் ரூபா 243,094,833 ஆக இருந்தது. எனவே பற்றாக்குறை அதிகரிப்பு ரூபா 163,890,321 இருந்தது. இந்த பற்றாக்குறை அதிகரிப்புக்கு முக்கிய காரணமாக பாடசாலை புத்தக அச்சிட்டு வருமாணத்தில் ஏற்பட்ட குறைவு ரூபா 388,013,381 ஆக கானப்பட்டது.

### 2.2 விகித பகுப்பாய்வு

கடந்த ஆண்டில் 1 : 0.87 என்ற நடைமுறை விகிதம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 1 : 0.75 ஆகக் குறைந்தது. விரைவு விகிதம் 1 : 0.62 இருந்து 1 : 0.34 ஆகக் குறைந்ததுவிட்டது. மேலும் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்கான மொத்த இலாப விகிதம் 14.5 % மற்றும் தேறிய இலாப விகிதம் 19.5 % முறையே 0.30 % மற்றும் 45 % ஆக குறைந்ததுள்ளது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானம் | முகாமைத்துவ கருத்துகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் லாட்ாரி சபையுடனான ஒப்பந்தத்தின் படி தேசிய லொத்தர் சபையிற்கு உரிய காலத்தில் லாட்டரி சீட்டுக்களை அச்சிட்டு வழங்கவில்லை. இதற்காக தேசிய லொத்தர் சபையால் விதிக்கப்பட்ட அபராதம் ரூபா 10,181,000 ஆகும். | இது கூட்டுத்தாபனத்தின் நிதி பிரச்சினைகள் மற்றும் சரியான நேரத்தில் லாட்டரி சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான மூலப்பொருட்களை வாங்க முடியாமல் போனது. | மூலப்பொருட்களை சரியான நேரத்தில் கொள்வனவு செய்வது மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளுக்கு கட்டளை செய்ய ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) 2019 ஆம் ஆண்டிற்கான பள்ளி பாடப்புத்தகங்களை அச்சிட்டு வழங்குவதற்கான கல்வி வெளியிட்டுத் தினைக்களத்துடான ஒப்பந்தத்தின் படி 01 முதல் 26 நாட்கள் தாமத | நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை காரனமாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் அல்லது பணிப்பாளாகள் குழு நான்கு மாதங்களுக்கும் மேலாக இல்லாததால் கொள்வனவு குழுக்களை அமைக்க முடியாததால் | பள்ளி பாடப்புத்தகங்களை அச்சிடுதல் கூட்டுத்தாபனத்ததிற்கு முக்கிய வருமானமாகும். தேவையான மூலப்பொருட்களை களஞ்சியப்படுத்த வேண்டும். சரியான நேரத்தில் அச்சு |

| | | |
|---|---|---|
| நாட்களாக இருந்தது. உரிய நேரத்தில் அச்சிடப்படட பள்ளி பாடப்புத்தகங்களை கல்வி வெளியிட்டுத் தினைக்களத்துக்கு ஒப்படைக்கதாதல் கல்வி வெளியிட்டுத் தினைக்களம் செலுத்தவேண்டிய தொகையில் ரூபா 38,262,345 தாமதக் கட்டணமாக விதித்துள்ளது. | பாடப்புத்தகங்களுக்கான காகித புத்தகங்கள் மற்றும் பிற மூலப்பொருட்களை கொள்வனவு செய்ய முடியாமல் போனது. மேலும் நிறுவனம் நிதி சிக்கல்களாலும் பாதிக்கப்பட்டிருந்தது. | கட்டளை வழங்க வேண்டும். |
| (இ)கூட்டுத்தாபனத்தினால் 2017 ஆம் ஆண்டில் லாட்டரி அச்சிடுவதற்காக வாங்கிய இயந்திரத்தின் செயல்பாட்டில் நிறுவனம் முழுமையாக திருப்தி அடைவதாக பொது முகாமையாளர் நவம்பர் 20, 2017 அன்று அறிவித்திருந்தார். இருப்பினும் பெப்ரவரி 2018 முதல் 30 நவம்பர் 2018 வரை, இயந்திரத்தின் Flexo மற்றும் மாறும் பகுதி பழுதடைந்ததால் 336 மணிநேரம் மற்றும் 166 மணிநேரம் விரய நேரமாக காணப்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | தொழில்நுட்ப மதிப்பிட்டு குழு அலட்சியம் அல்லது இயந்திர செயற்பாட்டாளர்களின் அலட்சியம் காரணமாக நிலைமை ஏற்பட்டாலும் பொறுப்பு சம்பந்தப்பட்ட கட்சிக்கு வழங்கப்பட வேண்டும். |
| (ஈ)தேசிய லொத்தர் சபையால் அச்சிடப்பட்ட மகஜன சம்பத (லாட்டரி எண் 3665) 2018 ஆண்டிற்கு பதிலாக 2008 ஆண்டு என பிழையாக அச்சிடப்பட்டிருந்தது. இதனால் 1,125000 லாட்டரி ரிக்கற்கள் நீக்கப்பட்டது. இதனால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 354,477 தேவையற்ற செலவு ஏற்பட்டது. | பதில் வழங்கப்படவில்லை | பொறுப்பானவார்களிடம் இருந்து இழப்பை அறவிடுதல். இது போன்ற பிழைகள் ஏற்படாதவாறு ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். |
| (உ) கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பனந்துரா பதுக்காவில் உள்ள | கூட்டுத்தாபனத்தின் 107 மில்லியன் ரூபா காணி விற்பனைக்கான அமைச்சரவை | கூட்டுத்தாபனத்தின் காணி கொடுக்கல்வாங்கல்களை |

| | | |
|---|---|---|
| காணியின் மதிப்பிட்ட பெறுமதி ரூபா 107,000,000 ஆகும் . இது ஏக்கர் 13 ரூட் 06 பொச் 25 கொண்டுள்ளது. 2000 ஆண்டில் கைதொழில் பூங்காவை நிறுவ கைதொழில் அபிவிருத்தி சபைக்கு வழங்கப்பட்டது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் இறுதி வரை காணி இழப்பிட்டுக்கு கொடுப்பனவை வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. | மெமோராண்டம் சமர்பிக்கப்பட்டது. அதற்கேற்ப எதிர்காலத்தில் முடிவுகள் எடுக்கப்படும். | பூர்த்தி செய்யவும் கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 20 மில்லியன் ரூபாவை வழங்க 09 ஓகஸ்ட் 2019 பொது முயற்சிகள் குழுவினது கூட்டத்தில் கட்டளையிடப்பட்டது. |

**3.2 கொள்வனவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 203,509,234 பெறுமதியான லாட்டரி அச்சு இயந்திரம் வாங்கப்பட்டது. கூட்டுத்தாபனம் லாட்டரி அச்சுப்பொறிக்கான கடவுச்சொல்லை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. மென்பொருளை உட்புகுத்துவதற்கு உற்பத்தியாளர் இந்நிய நிறுவனத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டியிருந்தது. மேலும் இயந்திரத்தின் உத்தரவாத காலம் மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் நவம்பர் 20 ஆம் திகதியுடன் காலாவதியானது என்றாலும் கூட்டுத்தாபனம் உற்பத்தியாளாரின் உள்நாட்டு முகவருடன் ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தத்தில் ஈடுபடவில்லை. | நாங்கள் தற்போது இதை அமைச்சுடன் ஒருங்கிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். அதன்படி நடவடிக்கை எடுப்போம். | பொருத்தமான கடவுச்சொல்லை பெற உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். கூட்டுத்தாபனம் உள்நாட்டு முகவருடன் வருடாந்த பராமரிப்பு ஒப்பந்தத்தை செய்ய வேண்டும். |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் லாட்டரி அச்சு இயந்திரத்தின் செயல்பாட்டிற்கு வருடாந்த | கூட்டுத்தாபனம் அவற்றை பயன்படுத்துவதற்கான நடைமுறை அறிவு காணப்படவில்லை. | களஞ்சியத்தில் மீதமுள்ள 61 டேப்ரோல்கள் காலாவதியானவை எனவே அவை பயன்பாடுத்த முடியாது. |

| | | |
|---|---|---|
| Flexo டேப்ரோல் 5 தேவை. ஆனால் இது 2017 ஆண்டில் ரூபா 3,115,200 க்கு வாங்கப்பட்டன. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் டிசம்பர் 31 நிலவரப்படி Flexo டேப்ரோல் மொத்த பெறுமதி ரூபா 2,879,200 ஆகும். களஞ்சியத்தில் 61 டேப்ரோல்கள் விடப்பட்டு காலாவதியாகிவிட்டன. | | எனவே பொருட்களை கட்டளை இடும் போது வருடாந்த கேள்வியை கவனத்தில் கொள்ள வேண்டும் |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடங்கள் 2012 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டு தற்போது கூட்டுத்தாபனத்தினால் வாங்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி செயல்பாடுகள் தொடர்பான (Cadre Assessment) தேவைக்கேற்ப திருத்துவதற்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. | கூட்டுத்தாபனம் வாங்கிய உபகரணங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி செயல்பாடுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஊழியர்களின் மறுசீரமைப்பு நிறைவடையும் நிலுவையில் உள்ளது. மேலும் அடுத்த மாதத்திற்குள் பணிகள் முடிவடைந்து அறிக்கை சபையின் ஒப்புதலுக்காக சமாப்பிக்கப்படும். | அச்சிடும் தொழில் தொழில்நுட்பத்துடன் வேகமாக மாறுகிறது. புதிய அச்சு பொறிகளை இயக்க ஒப்பிட்டளவில் குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்கள் தேவை. இந்த ஆண்டு புதிய அச்சிடும் இயந்திரங்களை வாங்க கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள்ளதால் தற்போதுள்ள இயந்திரங்களின் செயல்திறனை ஊழியர்கள் தீர்மானிக்க வேண்டும் |
| (ஆ) கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.4 இன் படி விண்ணப்பதாரரைத் தேர்தெடுக்கும் போது போட்டிப் பரீட்சை அல்லது முறையான நேர்காணலின் பெறுபேறுகள் பற்றி பணிப்பாளர் குழுவின் முடிவின் பேரில் விண்ணப்பங்கள் அழைக்கப்பட வேண்டும். நடைமுறையை மீறி 2012 இல் உதவி கணக்காளர் கணக்காளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். | அடுத்த பணிப்பாளர் குழுவிற்கு அறிவிக்கப்பட்டு அதன்படி செயல்படும். | கூட்டுத்தாபனத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு ஏற்ப செயல்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ)மனிதவள முகாமையாளர் பதவி இராஜினாமா காரணமாக மனிதவள முகாமையாளர் பதவி 2018 நவம்பர் 1 முதல் 2019 ஜீன் 21 வரை வெற்றிடமாக உள்ளது. இந்த பதவியின் கடமைகளை புரிய கல்வி அமைச்சின் உதவி செயலாளர் நியமிக்கப்பட்டார். | பதில் வழங்கப்படவில்லை | கூட்டுத்தாபனத்தில் கிட்டத்தட்ட 700 ஊழியர்கள் நிரந்தர பதவியை கொண்டவர்களாக உள்ளனர். எனவே முழுநேர மனிதவள முகாமையாளரை நியமிக்கபட வேண்டும். |